1. Freelowing table salt.
2. Dairy Salt.
3. Cattle licks.
4. Soral cement tiles.
5. Potassium schoentie (double sulphate of potassium and magnesium).
6. Hydrated calcium silicate.
7. Light basic magnesium carbonate.
8. Potashalum.
9. Sodium cholarate.
10. Magnesium metal.

இந்த பத்திலே எட்டு கெமிகல்சைப் பொறுத்து அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

*302 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்-மின் சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

வேதாரண்யத்தில் உப்பை மூலப் பொருளாகக்கொண்ட இராசயனப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுத் துறையில் அமைக் கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேதாரண்யம் பகுதி யில் உப்புத் தொழில் ஏற்படுத்த நிலத்தை தொழில் நுட்ப-பொருளா தார ரீதியில் மேம்படுத்துவது ஆய்விலுள்ளது.

Conference of Agriculture Ministers.

*303 Q. THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether it is a fact that a conference of the State Agriculture Ministers was held in New Delhi in January 1974 ; and

(*b*) the details of the subjects discussed at the conference?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த ஐந்து சிபார்சுகளில் (setting up of a gobar gas plant) என்று இருக்கிறது. இது இப்பொழுது எந்தெந்த இடங்களில் ஏற்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சரவர்கள் சொல்லுவார்களா?

---

*384-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, gobar gas plant பற்றி நமது காதி வாரியத் துறை அமைச்சரவர்களிடத்திலே கேட்க வேண்டும். அந்த வாரியத்தின் மூலம் அது செயல்படுத்தப்படுகிறது. அடுத்து, sewage utilisation scheme மதுரை நகராட்சி உள்பட 10 local bodies களில் அமல்படுத்துவதாக இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த ஐந்து விதமான ஆராய்ச்சியிலே நுண்ணுயிர் வளர்ப்புக் குடுவைகள் வழங்குதல் என்று ஒன்று இருக்கிறது. அதாவது பூமியிலிருந்து வரும் அந்தப் பூச்சிகளை கொல்லவும், அல்லது சரியான சத்து ஏற்படுத்துவதாக நுண்ணுயிர் வளர்ப்புக் குடுவைகள் அளிக்கவும் நடவடிக்கை விரைவில் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இந்த பேக்டீரியல் கல்சரைப் பொறுத்தவரையில், அது ரிசோபியா என்ற கிருமிக்கு ஆகாயத்திலுள்ள நைட்ரஜன் சத்தைப் தரையிலே வைக்கும் சக்தி இருப்பதால் அந்த ரிசோபியா என்ற அந்த நுண்ணுயிர் வளர்ப்புக் குடுவைகளைக் கொடுக்கிறோம். அதை பிளாஸ்குகளிலும் கொடுக்கிறோம், பாலதீன் பைகளிலும் கொடுக்கிறோம். சென்ற ஆண்டு ஏறத்தாழ இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட பேக்குகளைக் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, மாநகராட்சிகளிலும், பெரிய பெரிய நகராட்சிகளிலும் இந்த "மெகானிக்கல் கம்போஸ்ட் பிளாண்ட்" களை நிறுவுவது பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது? அதைப்பற்றி அரசு என்ன முடிவைச் செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, முதலிலே இந்த மெகானிக்கல் கம்போஸ்ட் இயந்திரங்களை சென்னை மாநகராட்சியிலும், மதுரை மாநகராட்சியிலும் செயல்படுத்துவது என்று நினைத்து, அதற்கான தனியான திட்டம் தயாரித்து, சென்னை நகரத்திற்கு ஏறக்குறைய 61.75 இலட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டத்தை தயார் செய்து வருகிறோம். இதற்கு மத்திய அரசின் மானியம் உண்டு. அதைப் பற்றித் தகவல் வரவில்லை.

Correspondence course for agriculturists.

*304—Q— Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether it is a fact that correspondence course has been started by the Tamil Nadu Agricultural University Coimbatore, and